மேல்.மா/கள/அல் - முபாறக் கனிஷ்ட வித்தியாலயம் - மல்வானை

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் விசேட செயற்றிட்டம் - 2022

சுட்டெண்..... வினாத்தாள் - 1 1 மணித்தியாலம்

ஆசிரியர். M.அப்துல் வாஜித் ஆசிரியர். M.R.Z.M. நிம்னாஸ்

1. கட்டத்தினுள் உள்ள உருவை பெருமளவில் ஒத்ததாக உள்ள உருவைத் தெரிவுசெய்க.





1)  2)  3) 

2. கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு



1)  2)  3) 

3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக

3.  

உரு A உரு B

A, B ஆகிய உருக்களுக்கும் இடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன.

1) 1 2) 3 3) 2

4.  

உரு A உரு B

A, B ஆகிய உருக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை

1) 4 2) 3 3) 5

5, 6 ஆகிய வினாக்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவுசெய்க.

5.

1) உடல் சரீரம் யாக்கை

2) அழகு எழில் கவின்

3) சூரியன் பரிதி மதி

6.

1) மருத்துவர் தாதி நோயாளி

2) மீனவர் கடல் சந்தை

3) அதிபர் ஆசிரியர் மாணவர்

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

LEARN EASY
KNOWLEDGE IS POWER

AIMST UNIVERSITY

Call for more Details :

071-922-6963



7. இக்கவிதை தரும் முழுமையான செய்தி யாது?

கற்பிப்போர் கண்கொடுப்போரே! – அந்த
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! – நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும்!

1) கற்பிப்போர் கண்ணைக் கொடுப்பர்

2) ஆசிரியர் சொற்படி கேட்டு நன்றாகப் படிக்க வேண்டும்

3) நாளும் நற்பெயர் எடுத்திட வேண்டும்.

8. கீழே பந்தியொன்று தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவுசெய்க.

காலிக் கோட்டையானது ..... அமைக்கப்பட்ட மிகப் பழமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு ..... இருந்தது. அதன் ..... வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன.

1) போர்த்துக்கேயரால் கம்பீரமாக நுழைவாயில்	2) ஆங்கிலேயரால் நேராக மைதானம்	3) போர்த்துக்கேயரால் இருளாக பாதை

9. 'திடசங்கற்பம்' எனும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்

1) கப்பம் 2) கபடம் 3) சாகசம்

10. 345,456,567,.....789 கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இருக்கவேண்டிய எண் யாது?

1) 568 2) 876 3) 678

அடைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் ஏற்ப 11,12ஆம் வினாக்களுக்கு விடை தருக

இந்நாள்	= A	உதவி	= E
அனாதைகளுக்கு	= B	உங்களுக்கு	= F
நன்னாள்	= C	ஆகட்டும்	= G
செய்வோம்	= D	நாம்	= H


11. அர்த்தமுள்ள வாக்கியமாக அமையும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் எது?

1) HFAG 2) HBED 3) BHAD

12. வாழ்த்தினைக் குறிப்பிடும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் யாது?

1) HBEG 2) BACDE 3) PACG


13.



இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்திற்கு பொருத்தமான எண் யாது?

1) 15 2) 25 3) 20

14.



1) 20 2) 32 3) 27

www.ikedu.lk

15. 4 ¥ 2 = 4 € 2 எனும் கணிதத் தொடர்புக்கமைய ¥, € எனும் குறியீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?


1) – உம் ÷ உம் 2) + உம் ÷ உம் 3)+ உம் x உம்

16. பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

B→ᗺ K→.....

D→ᗡ F→.....

1) K உம் F உம் 2) ꓘ உம் ㄩ உம் 3) ꓘ உம் ㄱ உம்

17. 

இவ்வுருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 10 2) 8 3) 12

18.

7	4	6	23	15
9	18	34	21	2
10	8	30	17	28

அடைப்பில் உள்ள எல்லா ஒற்றை எண்களினதும் கூட்டுத்தொகை யாது?

1) 87 2) 92 3) 95

19. 79 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 9 ஐ எழுதவேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?


1) 13 2) 11 3) 14

20. 

உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சம நிலையில் உள்ளது. அதற்கேற்ப ■■▲ இற்கு சமன் பின்வருவனவற்றில் எது?

1) ▲●● 2) ▲▲ 3) ▲■●

21. விலங்குகள், பறவைகள், மைனா, முயல் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



□ இன் மூலம் வகைக்குறிக்கப்படுவது

1) முயல் 2) பறவைகள் 3) மைனா

22. 31 நாட்கள் உள்ள ஒரு மாதத்தில் முதலாம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் 31ஆம் திகதி என்ன கிழமை

1) செவ்வாய்க்கிழமை 2) வியாழக்கிழமை 3) புதன்கிழமை


23. ஒரு வீதியில் உள்ள மின்கம்பங்களுக்கிடையே 3 வர்ண மின்குமிழ்கள் வீதம் தொங்கவிடப்பட்டு அவ்வீதியை அலங்கரிக்க தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 8 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை வர்ண மின்குமிழ்கள் தேவை

1) 24 2) 21 3) 26

24. எனக்கு வயது 8 வருடங்களாக இருந்தபோது எனது சகோதரியின் வயது எனது வயதின் அரைவாசியாக இருந்தது. எனக்கு இப்போது வயது 18 வருடங்கள் எனின் எனது சகோதரியின் தற்போதைய வயது யாது?

1) 14 2) 9 3) 10

www.ikedu.lk

25. 

உருவில் ஒத்த மரக்குற்றிகள் சிலவற்றைப்பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 6 2) 10 3) 8

26. 2022 ஆம் வருடம் எந்நூற்றாண்டு, எத்தசாப்தத்திற்கு உரியது?

1) 20ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்

2) 20ஆம் நூற்றாண்டு 3ஆம் தசாப்தம்

3) 21ஆம் நுற்றாண்டு 3ஆம் தசாப்தம்

27. ஒரு நிரையில் பாத்திமா முன்னால் இருந்து பார்க்கும் போது 12ஆவதாக நின்றாள். பின்னால் இருந்து பார்க்கும் போது அவள் 4ஆவதாக நின்றாள். இதற்கேற்ப நிரையிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

1) 15 2) 16 3) 13

28. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க

1) 3446758 – 3447658

2) NMWAYZ – NMWAYZ

3) 84MZ4Y – 84ZM4Y

29. வியாபாரி ஒருவர் தனது கடையிலிருந்த 3kg பருப்பை 500g பக்கட்களில் பொதி செய்தார். அவர் பொதி செய்த பக்கட்களின் எண்ணிக்கை யாது?

1) 4 2) 6 3) 8

30. 435,256,317,632,135 ஆகிய எண்களை இறங்குவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் எது?

1) 256 2) 435 3) 317


31. விருந்துபசார நிகழ்வு ஒன்றில் 6 நண்பர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டனர். எனவே அங்கு மொத்தம் எத்தனை கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?

1) 15 2) 30 3) 20

32. ஒரு சதுர வடிவக்காணியைச் சுற்றி சம இடைவெளியில் கம்பங்கள் நடப்பட்டு இருந்தன. அக்காணியின் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது 6 கம்பங்கள் தென்பட்டன. ஆகவே அச்சதுர வடிவக் காணியைச்சுற்றி அமைந்துள்ள மொத்த கம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) 24 2) 28 3) 20

33. தொடக்கத்தில் தரப்பட்டடுள்ள உருவை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும் போது அது தோன்றும் விதத்தை தெரிவு செய்க.



1) 

2) 


3) 

34. காடு ஒன்றில் குறித்த ஒரு தொகை யானைகள் நின்றன. அவைகளின் கால்களினதும் தும்பிக் கைகளினதும் கூட்டுத்தொகை 30 ஆகும். அங்கு உள்ள யானைகளின் எண்ணிக்கை யாது?


1) 6 2) 5 3) 7

www.kedu.lk


35. உரு A இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தாளை புள்ளிக்கோடு வழியே இரண்டாக மடித்து உரு B இல் உள்ளவாறு துளைகள் இடப்பட்டன. அதனை முன்னர் இருந்தவாறு விரிக்கும் போது அது காணப்படும் விதம் யாது?





உரு A




உரு B

1) 

2) 


3) 

36. 

பின்வரும் வலையுருவை மடித்து அமைக்கத்தக்க திண்மம் யாது?

1) சதுரமுகி 2) கனவுரு 3) நான்முகி

- **ஒரு மாணவன் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற பாதையைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு கேட்கப்படும் வினாவுக்கு விடை தருக.**



37. மாணவன் பாடசாலைக்குச் செல்லும்போது எத்தனை தடவைகள் வலப்பக்கத்திற்கு திரும்பியுள்ளான்?

1) 4 2) 3 3) 2

38. மைதானம் ஒன்றில் சிவப்பு,மஞ்சள்,பச்சை என்ற ஒழுங்கில் கொடிக்கம்பங்கள் மாறி மாறி நடப்பட்டு மைதானம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வொழுங்கில் 45வதாக காணப்படும் கொடிக்கம்பத்தின் நிறம் யாது?

1) பச்சை 2) சிவப்பு 3) மஞ்சள்

- **39, 40 ஆகிய வினாக்களில் உள்ள சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.**

39. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்

1) ஆழம் அறியாமல் காலை விடாதே 2) சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

3) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

40. சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது

1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை 2) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு

3) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

மேல்.மா/கள/அல் - முபாறக் கனிஷ்ட வித்தியாலயம் - மல்வானை

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் விசேட செயற்றிட்டம் - 2022

சுட்டெண்..... **வினாத்தாள் - 2** **1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

ஆசிரியர். M. அப்துல் வாஜித் **ஆசிரியர். M.R.Z.M. நிம்னாஸ்**

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

தமிழ் கூறும் நல்லுலகில் குழந்தைகளுக்கான நீதிகளைக் கூறிய பலருள் ஔவையார், பாரதியார் ஆகியோரை இன்னும் நாம் மறக்கவில்லை. அவர்களுள் ஒருவரான ஔவையாரால் எழுதப்பட்ட ஆத்திசூடியைப் பற்றிப் பேசுவதற்காக உங்கள் முன் வந்துள்ளேன். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். இவ் உலகில் மானிடராய்ப் பிறந்த நாம் சிறப்புடன் வாழ வழி காட்டக்கூடிய அறக்கருத்துக்களைக் கூறும் நூலே ஆத்திசூடியாகும்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

I. குழந்தைகளுக்கான நீதிகளைக் கூறிய இருவரைக் குறிப்பிடுக.....

II. ஔவையாரால் எழுதப்பட்ட நூல் ஒன்றினைப் பந்தியிலிருந்து எழுதுக.....

III. 'பாரில்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.....

IV. பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழி ஒன்றைக் குறிப்பிடுக.....

V. பந்தியில் இடம்பெற்றுள்ள தன்மைப் பன்மை பெயர்ச் சொல்லை எழுதுக.....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

I. பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. (.....)

II. மான்கூட்டம் சிதறி ஓடின. (.....)

III. எனது ஒவ்வொரு புத்தகமும் நல்லது. (.....)

3. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க

முற்பகல் ..... பிற்பகல் விளையும்.

4. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

I. மாதவா நீ பாடசாலைக்குச் சென்றாயா

II. எவ்வளவு பெரிய மலை

5. பின்வரும் இலைக்குரிய மரபுச் சொற்களை எழுதுக.

I. பனை..... II. நெல் .....

6. பின்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.

I. மூத்தவன் ..... II. கணவன் .....

7. பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.

I. பழம் + வகை ..... II. முள் + புதர் .....

8. பின்வரும் தொடர் மொழிக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் .....

www.lkedu.lk

9. பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை இணைமொழிகளைக் கொண்டு பூர்த்தி செய்க.

I. சந்தையில் காய்கறிகள்.....க் காணப்பட்டன.

II. தனது குட்டியைத் தொலைத்த பூனை..... தேடி அலைந்தது.

10. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

சக்கரவர்த்தியே / நன்கொடையாகக் / துரியோதன / கொடுத்தார் / அங்கதேசத்தை / கர்ணனுக்கு

.....

11. பின்வரும் இறந்தகால வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்.

.....

12. **பின்வரும் பாடலைப் பூர்த்தி செய்க.**

ஓரிடத்தில் இருந்திடாமல்

..... கேட்டிடலாம்

பாடகரைப் பார்த்திடாமல்

..... கேட்டிடலாம்.

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

I) Fruits..... II) Rainbow.....

14. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

I)



.....

II)



.....

15. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

I) come / I / May / in? .....

II) two / have / brothers / I .....

16. "தும்ரிய ஸ்தானய" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

17. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

நூலகம் எங்கே?.....

18. "எனது அழகிய பூந்தோட்டம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எழுவாய்,பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்.

1) .....

2) .....

3) .....

www.lkedu.lk

19. '5387' தரப்பட்டுள்ள எண்ணின் எண் பெயரை எழுதுக

……

20. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

3506, 2605, 3650, 2560……..

21. அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

முந்திய எண்	உரோம எண்	பிந்திய எண்
……	IX	……
……	V	……


22. ஒரு பாடசாலையில் 475 ஆண் மாணவர்களும் 596 பெண் மாணவிகளும் கல்வி கற்கின்றனர். அப்பாடசாலையில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

……

23. ஒரு பழ வியாபாரியிடம் 546 மாம்பழங்கள் இருந்தன. அவற்றில் 208 மாம்பழங்கள் விற்கப்பட்டன. எனவே விற்கப்பட்டபின் எஞ்சியுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

……

24.



இவ்வுருவில் $\frac{3}{4}$ ஐ நிழற்றுக.

25. ஒரு பெட்டியில் 32 முட்டைகளை அடுக்கலாம் எனின் அவ்வாறான நான்கு பெட்டிகளில் எத்தனை முட்டைகளை அடுக்கலாம்?

……

26. எண்கோலங்களை அவதானித்து வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

I) 137, 142, 147, ……., ……..

II) 75, 72, 69, ……., ……..

27. ரவியிடம் 440 மாபிள்கள் இருந்தன. ரவி அவற்றை தனது நண்பர்கள் மூவருக்கு பகிர்ந்து கொடுத்தான்.

I) ஒரு நண்பன் பெற்ற மாபிள்களின் எண்ணிக்கை யாது? ……

II) பகிர்ந்தளித்த பின் எஞ்சிய மாபிள்கள் எத்தனை? ……..

28. ஒரு தொட்டியில் **14*l* 400*ml*** நீர் இருந்தது. அதனுடன் மேலும் **2*l* 900*ml*** நீர் சேர்க்கப்பட்டது. எனவே தற்போது தொட்டியில் உள்ள நீரின் கொள்ளளவு யாது?


……***l*** ……..***ml***

29. மீன் வியாபாரி ஒருவர் **15kg** நிறை கொண்ட மீன் ஒன்றிலிருந்து **4kg 750g** நிறை கொண்ட துண்டு ஒன்றை விற்றார். எனவே தற்போது மீன் வியாபாரியிடம் எஞ்சியுள்ள மீனின் நிறை யாது?

…..….**kg**……..…**g**

www.ikeduk

30. மாணவர் குழுவொன்று அதிகமாக விரும்பும் பழம் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



I) வாழைப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

II) அதிகமான மாணவர்கள் விரும்பும் பழம் யாது?

.....

31 தொடக்கம் 45 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

31. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளின் மூன்றாவது படிமுறை எது?

1. பிரார்த்தனை 2. திடசித்தம் 3. உள்ளத்தைத் தளர்த்தல்

32. இலங்கையின் தேசியக் கொடியில் செம்மஞ்சள் நிறப்பட்டி குறித்து நிற்பது

1. தமிழ் மக்களை 2. சிங்கள மக்களை 3. முஸ்லிம் மக்களை

33. பின்வருவனவற்றுள் தை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. வாகை 2. பாலை 3. இறப்பர்

34. ஒளடதப் பானம் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

1. வில்வம் பூ 2. கத்தாப் பூ 3. வெட்சிப் பூ

35. இரவு வேளையில் நடமாடும் பிராணி **அல்லாதது**

1. உடும்பு 2. எலி 3. ஆந்தை

36. பெரும்பாலும் பூச்சியினங்கள் எத்தனை கால்களைக் கொண்டன?

1. எட்டு 2. ஆறு 3. நான்கு

37. 

அருகிலுள்ள உபகரணத்தின் பெயர் பின்வருவனவற்றுள் எது?

1. அத்தாங்கு 2. மீன்வலை 3. கரப்பு

38. பின்வருவனவற்றுள் தனிப்பட்டரீதியில் பயன்படுத்தும் உபகரணம் எது?

1. நிலைக்கண்ணாடி 2. சீப்பு 3. மின் விசிறி

39. உடலுக்கு சக்தியைத் தரும் உணவு எது?

1. சோறு 2. சோயா 3. கரட்

40. இலையான் மொய்த்த உணவை உண்பதால் ஏற்படக்கூடிய நோய் எது?

1. நீரிழிவு 2. கழிச்சல் 3. டெங்கு

41. மரங்களை வெட்டுதல், காடுகளை அழித்தல் போன்ற மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தம்

1. காட்டுத் தீ 2. சுனாமி 3. வரட்சி

42. பின்வருவனவற்றுள் தொற்றா நோய் எது?

1. கொரோனா 2. நீரிழிவு 3. கொப்பளிப்பான்

43. நீராவியைக் குளிரச் செய்யும் போது யாது நிகழும்?

1. மீண்டும் நீராக மாறும் 2. விரைவில் உலர்ந்து விடும் 3. பனிக்கட்டியாக மாறும்

44. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை விரட்ட நடப்படும் தாவரம் எது?

1. மல்லிகை 2. செவ்வந்தி 3. கடுப்புல்

45. 

அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டிருக்கும் குறியீடு

1. பாதசாரிகள் கடக்குமிடம்
2. சிறுவர் பூங்கா முன்னால்
3. முன்னால் சிறுவர் கடவை

www.ikedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.learneasy.lk || www.lkedu.lk

மேல்.மா/கள/அல் - முபாறக் கனிஷ்ட வித்தியாலயம் - மல்வானை

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் விசேட செயற்றிட்டம் - 2022

புள்ளி வழங்கும் திட்டம்

ஆசிரியர். M.அப்துல் வாஜித் ஆசிரியர். M.R.Z.M. நிம்னாஸ்

பகுதி – 1

1. (1)	**2.** (2)	**3.** (3)	**4.** (1)	**5.** (3)	**6.** (2)	**7.** (2)	**8.** (1)	**9.** (2)	**10.** (3)
11. (2)	**12.** (3)	**13.** (1)	**14.** (2)	**15.** (1)	**16.** (3)	**17.** (1)	**18.** (2)	**19.** (1)	**20.** (2)
21. (3)	**22.** (3)	**23.** (2)	**24.** (1)	**25.** (2)	**26.** (3)	**27.** (1)	**28.** (2)	**29.** (2)	**30.** (3)
31. (1)	**32.** (3)	**33.** (2)	**34.** (1)	**35.** (3)	**36.** (2)	**37.** (1)	**38.** (1)	**39.** (2)	**40.** (3)

பகுதி – 2

1.	(I) பாரதியார்,ஔவையார் (II) ஆத்திசூடி (III) உலகில் (IV) அரிது அரிது (V) நாம் **(1x5 = 5 புள்ளிகள்)**
2.	(I) (சரி) (II) (பிழை) (III) (சரி) **(1x3 = 3 புள்ளிகள்)**
3.	செய்யின் **(1 புள்ளி)**
4.	(I) மாதவா, நீ பாடசாலைக்குச் சென்றாயா? (II) எவ்வளவு பெரிய மலை! **(1x2 = 2 புள்ளிகள்)**
5.	(I) ஓலை (II) தாள் **(1x2 = 2 புள்ளிகள்)**
6.	(I) மூத்தவள் (II) மனைவி **(1x2 = 2 புள்ளிகள்)**
7.	(I) பழவகை (II) முட்புதர் **(1x2 = 2 புள்ளிகள்)**
8.	வேட்பாளர் **(1 புள்ளி)**
9.	(I) வாடி வதங்கி (II) அங்குமிங்கும் / அங்கும் இங்கும் **(1x2 = 2 புள்ளிகள்)**
10.	துரியோதன சக்கரவர்த்தியே கர்ணனுக்கு அங்கதேசத்தை நன்கொடையாகக் கொடுத்தார். **(1 புள்ளி)**
11.	நூங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்போம். **(1 புள்ளி)**
12.	ஓடி ஓடிக் பாட்டுக்களைக் **(1x2 = 2 புள்ளிகள்)**
13.	(I) பழங்கள் (II) வானவில் **(1x2 = 2 புள்ளிகள்)**
14.	(I) Bicycle (II) Pineapplė **(1x2 = 2 புள்ளிகள்)**

www.lkedu.lk

15. (I) May I come in? (II) I have two brothers	**(1x2 = 2 புள்ளிகள்)**
16. புகையிரத நிலையம்	**(1 புள்ளி)**
17. புஸ்தகாலய கொஹேத?	**(1 புள்ளி)**
18. சரியாக எழுதப்பட்ட வாக்கியங்களுக்கு புள்ளிகள் வழங்குக.	**(3x2 = 6 புள்ளிகள்)**
19. ஐயாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு	**(2 புள்ளிகள்)**
20. 2560, 2605, 3506, 3650	**(2 புள்ளிகள்)**
21. (I) VIII, X (II) IV, VI	**(4 புள்ளிகள்)**
22. 1071	**(2 புள்ளிகள்)**
23. 338	**(2 புள்ளிகள்)**
24. ஏதாவது 6 கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்	**(2 புள்ளிகள்)**
25. 128	**(2 புள்ளிகள்)**
26. (I) 152, 157 (II) 66, 63	**(4 புள்ளிகள்)**
27. (I) 146 (II) 2	**(3 புள்ளிகள்)**
28. 17***l*** 300***ml***	**(2 புள்ளிகள்)**
29. 10kg 250g	**(2 புள்ளிகள்)**
30. (I) 9 (II) மாம் பழம்	**(3 புள்ளிகள்)**

31. (2) திடசித்தம் **32.** (1) தமிழ் மக்களை **33.** (3) இறப்பர் **34.** (1) வில்வம் பூ
35. (1) உடும்பு **36.** (2) ஆறு கால்கள் **37.** (3) கரப்பு **38.** (2) சீப்பு
39. (1) சோறு **40.** (2) கழிச்சல் **41.** (3) வறட்சி **42.** (2) நீரிழிவு
43. (1) நீராக மாறு **44.** (3) முன்னால் சிறுவர் கடவை **45.** (2) செவ்வந்தி

(2x15 = 30 புள்ளிகள்)

முழு வினாத்தாளையும் கருத்திற் கொண்டு எழுத்துக்கள், இலக்கங்கள் தெளிவாகவும் சரியாகவும் எழுதியிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக.

திருத்தம் :- பகுதி 1, வினா இல:-12

12. வாழ்த்தினைக் குறிப்பிடும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் யாது?

1) HBEG 2) BACDE 3) FACG

www.lkedu.lk